செ.வெ.எண்.20 நாள்.08.10.2017.

# *பத்திரிக்கைச் செய்தி*

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 03.10.2017 அன்று வெளியிடப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய வரைவு வாக்காளர் பட்டியலில் (Draft Roll) 1238.651 ஆண் வாக்காளர் பட்டியலில் 1277579 பெண் வாக்காளர்களும் 79 இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் 2516309 வாக்காளர்கள் உள்ளனர். மேற்படி வரைவு வாக்காளர் பட்டியலில் வாக்காளர்கள் தங்கள் பெயர் இடம் பெற்றுள்ளதா என்பதை தேர்தல் ஆணையத்தின் இணையதளமான elections.tn.gov.in என்ற வலைதளத்தில் பார்வையிடலாம்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தற்போது நடைபெற்றுவரும் சிறப்பு சுருக்க திருத்தம் 2018-ன்படி (Special Summar Revision-2018) 01.01.2018-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு 31.12.1999 வரை பிறந்த நபர்கள் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளராக பதிவு செய்ய படிவம் 6, பெயர் நீக்கம் செய்ய படிவம் 7, பெயர் மற்றும் இதர திருத்த மாற்றம் செய்ய படிவம் 8-ஏ மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் பெயர் சேர்க்க படிவம் 10-ல் விண்ணப்பிக்கும் பணியினை சிறப்பு சுருக்க திருத்தப்பணி 2018 திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளை உள்ளடக்கிய 1368 நிர்ணயிக்கப்பட்ட வாக்குசாவடி அமைவிடங்களை (Designed location ) உள்ளடக்கிய 2931 வாக்குசாவடி மையங்களில் 03.10.2017 முதல் 31.10.2017 வரை படிவங்கள் பெறப்படுகிறது. இது தவிர மேற்படி சிறப்பு முகாம்கள் 08.10.2017 மற்றும் 22.10.2017 நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பொது வாக்குசாவடிகள்) ஆகிய நாட்களில் நடைபெறுகிறது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் / நீக்கல்/ திருத்தம் / இடம் மாற்றுதல் ஆகியவற்றுக்கான படிவங்கள் அங்கே கிடைக்கும். பூர்த்தி செய்திட்ட படிவங்களை அங்கேயே சமர்ப்பிக்கலாம். பொதுமக்கள் அங்கீகரிக்கப்பட்ட இண்டர்நெட் பிரௌசிங் செண்டர் மூலமாகவும் (Internet Browsing Centres) தேர்தல் ஆணையத்தின் இணையதளமான www.nvsp.in (National Voter's Services Portal) மூலமாக வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க / நீக்கம் திருத்தம் முகவரி மாற்றம் செய்ய மனு அளிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2018-ன் போது வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர்களை புதிதாக பெயர் சேர்ப்பதோடு இறந்த / இடம்பெயர்ந்த வாக்காளர் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவதற்கும் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

புதிதாக பெயர் சேர்க்க கோரும் விண்ணப்பத்துடன் வசிப்பிட முகவரி, மாற்றம் வயது குறித்த சான்று, உணவுப்பொருட்கள் பங்கீட்டு அட்டை / வங்கி அல்லது அஞ்சலக சேமிப்புக் கணக்குப் புத்தகம் / ஓட்டுநர் உரிமம் / கடவுச்சீட்டு / தொலைபேசி சமையல் எரிவாயு இணைப்பு ஆகியவற்றின் சமீபத்திய ரசீது ஆதார் அட்டை போன்றவற்றை முகவரி சான்றாக சமர்பிக்கலாம். வயது சான்றாக பிறப்புச்சான்றிதழ்களில் நகல் அல்லது பள்ளிச் சான்றிதழின் நகல் அளிக்கப்படலாம். 25 வயதுக்கு கீழுள்ள மனுதாரர்கள் வயதுச் சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். முதன்முறையாக விண்ணப்பிப்போரை (அதாவது 18-25 வயதிலுள்ள மனுதாரர்கள்) தவிர ஏனைய மனுதாரர்கள் அவர்களுடைய முந்தைய முகவரியையும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண்ணையும் படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க ( Insert) நீக்கம் செய்ய (Deletion) திருத்தம் செய்ய (correction) முகவரி இடம் மாற்றம் செய்ய (transpositions) இந்த அரிய வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுதத வேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.